பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 08 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்கள் நலத்திட்டங்களில் எந்தவொரு நபரும் விடுபடாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. மேகதாதுவில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்ட கர்நாடக மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்பில் இன்று நடைபெறுகிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

மக்கள் நலத்திட்டங்களில் எந்தவொரு நபரும் விடுபடாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இரண்டு நாள் ஆளுநர் மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர், ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு ஆளுநர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆளுநர் அலுவலகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய வகையில் மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை துரிதப்படுத்துவது மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வித்திடும் என்று அவர் கூறினார்.

பிற மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

மக்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழும் வகையில் ஆளுநர்கள் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், மாநில அரசுகளின் சிறப்பான செயல்பாடுகளுக்கு தேவையான அம்சங்களில் ஆளுநர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆளுநர் அலுவலக நிர்வாக நடைமுறைகள் சிறந்த முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆளுநர் அலுவலக நடவடிக்கைகளை டிஜிட்டல்மயமாக்குவதற்கான பணிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கல்வி நிறுவன வளாகங்களில் போதைப்பொருள் நடமாட்டத்தை தடுப்பதற்கான விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஈரோடு, திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்கள் பயனடையும் வகையில் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள நீரேற்று நிலையத்தை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் இதற்கான பணிகள் தொடங்கப்பட்டு 85 சதவீத பணிகள் நிறைவுற்ற நிலையில் கடந்த 3 ஆண்டு காலமாக மாநில அரசு இத்திட்டத்தை முடிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இத்திட்டத்திற்காக விவசாய நிலங்களில் குழாய்கள் பதிப்பதற்கான நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் உள்ள அணைகளைப் பாதுகாக்கும் வகையில் தேசிய அணைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் குழு அமைக்க வேண்டும் என்று திரு. அண்ணாமலை கோரிக்கை விடுத்துள்ளார்.

<<<<>>>>

மேகதாதுவில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்ட கர்நாடக மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் உறுதிபடக் கூறினார்.

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதை அடுத்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் அங்கு அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேட்டூர் அணையின் உபரி நீரை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே தமிழக அரசின் நோக்கம் என்றும், இதனை செயல்படுத்த போதிய நிதி தேவைப்படுவதாகவும் கூறினார்.

தற்போது மேட்டூர் அணையின் உபரிநீரை 52 ஏரிகளில் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்தை மேச்சேரி வரை விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் காவரி நீரைப் பயன்படுத்தி பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற அம்மாவட்ட மக்களின் கோரிக்கை குறித்து உரிய முறையில் பரிசீலனை செய்து செயல்படுத்தப்படும் என்று திரு. துரைமுருகன் உறுதியளித்தார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் பாலாற்றங்கரையில் உள்ள 300 ஆண்டுகள் பழமையான தேசிங்குராஜா மற்றும் ராணிபாய் நினைவு மண்டபத்தை புனரமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், இந்த நினைவு மண்டபம் பூங்காவுடன் அமைக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தும் வகையில் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றப்படும் என்று கூறினார்.

சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் பொதுப்பணித்துறைக்கான பட்ஜெட் அறிவிப்பில் இதற்கென 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் இந்த நினைவு மண்டபம் புனரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டத்தை ஒட்டிய மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரி கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் அடுத்த 3 நாட்களுக்கு மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை மாநில அரசு வெளியிட்டது.

இதன்படி தென்னிந்தியாவில் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மலையோர மாவட்டங்களில் யானைகள் கணக்கெடுப்பு பணிகள் கடந்த மாதம் நடைபெற்றது.

இந்த கணக்கெடுப்பு பணிகள் தமிழகத்தில் உள்ள 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டன.

இதில் ஆயிரத்து 836 வனத்துறை பணியாளர்கள் மற்றும் 342 தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.

யானைகளின் எண்ணிக்கை, பாலின விகிதம், இயக்கவியல் மற்றும் அவைகளின் வாழ்விடம் ஆகியவற்றை சிறப்பாக நிர்வகிப்பதற்கு அது அகுறித்த தெளிவான விவரங்களை அறிந்துகொள்ள இந்த கணக்கெடுப்பு உதவும்.

மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக யானைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 63ஆக அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் கடைமடை மாவட்டமான மயிலாடுதுறைக்கு வந்தடைந்துள்ளது.

இந்த தண்ணீர் இதர கிளை ஆறுகள் வாயிலாக பல்வேறு வாய்க்கால்களுக்கு பிரித்து அனுப்பப்படுவதன் மூலம் 48 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சோமாலியாவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர். 126 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் காணாமல் போ  ன 46 பேரை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

<<<<>>>>

பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் அன்னிய முதலீட்டாளர்கள் கடந்த மாதம் 54 ஆயிரத்து 727 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்துள்ளதாக தேசிய பங்கு பத்திர பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் பாரம்பாரிய மற்றும் பன்முக கலாச்சாரத்தன்மையை பறைசாற்றும் வகையில் 2024ஆம் ஆண்டுக்கான ஆகாஷவானியின் 2 நாள் இசை நிகழ்ச்சிகள் சென்னை, தில்லி உட்பட பல்வேறு வானொலி நிலையங்களில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்பூர் மாவட்டம நிர்வாகம் சார்பில் உணவு மற்றும் ஆடைகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சென்னையில் விதிமுறைகளுக்கு புறம்பாக செயல்பட்டு வந்த 5 தனியார் நட்சத்திர ஹோட்டல்களின் மதுபான கூடங்களுக்கான உரிமைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

கொழும்பில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்குகிறது.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி டை-யில் முடிவடைந்தது.

<<<<>>>>

போர்ச்சுகலில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Joshua Paris** இணை தோல்வியடைந்தது.

<<<<>>>>

பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டிக்கான காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

இன்று நடைபெறும் காலிறுதிப் போட்டியில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இதர காலிறுதி ஆட்டங்களில் பெல்ஜியம் - ஸ்பெயினையும், நெதர்லாந்து – ஆஸ்திரேலியாவையும், ஜெர்மனி – அர்ஜென்டினாவையும் எதிர்கொள்கின்றன.

ஆடவர் ஒற்றையர் பிரிவு பேட்மிட்டன் போட்டியின் இன்று நடைபெறும் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - டென்மார்க்கின் விக்டர் அக்சல்சென்-ஐ எதிர்கொள்கிறார்.

குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லவ்லினா போர்கோகைன் - சீனாவின் **Li Qian**-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் 25 மீட்டர் ராப்பிட் துப்பாக்கி சுடும் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் அனீஷ் பன்வாலா மற்றும் விஜய்வீர் சித்து ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் 3 ஆயிரம் மீட்டர் ஸ்டீப்பிள் சேஸ் ஓட்டத்தின் முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் பாருல் சௌத்ரியும், ஆடவர் நீளம் தாண்டுதலில் ஜெஸ்வின் ஆல்ட்ரினும் பங்கேற்கின்றனர்.

**<<<<the End>>>>**